## லக்கல பள்ளேகம பிரதேச சபை
## மாத்தளை மாவட்டம்

---

## 1 நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2011 யூன் 03 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 மே 06 ஆம் திகதி கணக்காய்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள லக்கல - பள்ளேகம பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கை

பொதுக் களஞ்சியப் பொருட்கள் தொடர்பாக கணக்கு வைப்பின் போது களஞ்சிய முற்பணக் கணக்கு முறை பின்பற்றப்படாமல் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள்/ திரவியங்கள் நேரடியாக செலவினத் தலைப்புகளுக்கு வரவு வைக்கப்பட்டு செலுத்தப்பட்டிருந்தது.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) 2009 ஆகஸ்ட் முதல் திசெம்பர் வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 100,000 ஆன தொலைபேசிப் பட்டியலுக்கான கணக்குகளில் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்படாமையால் 2010 ஆம் ஆண்டின் 105(2) செலவின விடயத்திற்கு வரவு வைக்கப்பட்டு செலுத்தப்பட்டிருந்தது. இதனால் ஆண்டின் செலவினம் அப்பெறுமதியால் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் கரந்தமுள்ள சனசமூக மண்டப நிர்மாணத்திற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 45,389 தொகை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சீ.பீ - ஆர்.பி. – 2996 உழவு இயந்திரத்திற்காக முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 61,397 தொகையான நிலுவை கடன் தவனைக்காக கடன்கொடுத்தோரின் கீழ் நிதி ஏற்பாடு மேற்கொள்ளாத காரணத்தால் மீளாய்வாண்டின் 105(3) செலவின விடயத்திற்கு வரவு வைக்கப்பட்டு செலுத்தப்பட்டிருந்தது. இதனால் ஆண்டின் செலவினம் அப்பெறுமதியால் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 2,587 தொகையான காசோலைப் புத்தகக் கட்டணத்தை 2010 ஆம் ஆண்டின் 105(3) செலவின விடயத்திற்கு வரவு வைக்கப்பட்டு செலுத்தப்பட்டிருந்தமையால் ஆண்டின் செலவினம் அப்பெறுமதியால் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 6,882 தொகையான முத்திரை வரியை 2010 ஆம் ஆண்டின் 105(3) செலவின விடயத்திற்கு வரவு வைக்கப்பட்டு செலுத்தப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் செலவினம் அப்பெறுமதியால் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) முன்னைய ஆண்டிற்குரிய வாரச் சந்தை சுத்திகரிப்புச் செலவினக் கட்டணமான ரூபா 6,000 தொகையனை மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்தமையால் ஆண்டின் செலவினம் அப்பெறுமதியால் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) 2008 ஆம் ஆண்டின் கணக்காய்வுக் கட்டணம் ரூபா 87,517 தொகையை மீளாய்வாண்டின் 105(3) செலவின விடயத்திற்கு வரவு வைக்கப்பட்டு செலுத்தப்பட்டிருந்தமையால் ஆண்டின் செலவினம் அப்பெறுமதியால் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) 2002 சனவரி 19 ஆம் திகதி 776 ஆம் இலக்க திட்ட வரைபடத்தின் 03 ஆம் இலக்க துண்டிற்குரிய ரூபா 25,000 பெறுமதியான 31 பேர்சஸ் காணியினை கொடை வள்ளல் ஒருவரினால் சபைக்கு பொறுப்பளிக்கப்பட்டிருந்த போதும் அச்சொத்துக்களை காணி மற்றும் கட்டிடத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஐ) பொது வழங்கல் கடன்கொடுத்தோரின் கீழ் செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணமாக 2010 சனவரி 01 ஆம் திகதி முன்கொண்டு வரப்பட்ட மீதியாக ரூபா 86,600 காண்பிக்கப்பட்டிருந்தது. சபையினால் 1994 முதல் 2003 வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 192,257 உம் 2008 முதல் 2010 வரையான காலப்பகுதிக்கு ரூபா 259,800 உமாக மொத்தம் ரூபா 452,057 தொகை செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணமாக இருந்த போதிலும், அப்பெறுமதியை கணக்குகளில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

(ஒ) நிலுவை நீர்க்கட்டணமான ரூபா 227,784 தொகையான மீதியொன்று காணப்பட்ட போதும், ஐந்தொகையில் கடன்கொடுத்தோரின் கீழ் அப்பெறுமதி காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

05 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 12,733,661 ஆக இருந்ததுடன், பயன்படு பதிவேடுகளின் பிரகாரம் அத்தகைய கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 16,438,266 ஆக இருந்தது.

### 1.3.4 தொங்கல் கணக்குகள்

2010 சனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான நிச்சயமற்ற தன்மையுடைய கணக்குகளில் செலவு மீதிகள் ரூபா 2,021,717 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டினுள் ரூபா 1,319,342 கணக்குகளுக்கு சேர்க்கப்பட்டிருந்த போதும், மீளாய்வாண்டின் இறுதியிலான கணக்கின் செலவு மீதி ரூபா 3,339,060 ஆக இருந்தது.

### 1.3.5 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 6,584,697 ஆக இருந்தது.

### 1.3.6 கணக்காய்வுக்கான சான்றுகளின்மை

#### (அ) பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

2011 ஆகஸ்ட் 08 ஆம் திகதி வரை 02 கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதில் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், அந்த ஐய வினாக்களுக்குட்பட்ட கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களது பெறுமதி ரூபா 184,190 ஆக இருந்தது.

#### (ஆ) தகவல் சமர்ப்பிக்கப்படாமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் மொத்தம் ரூபா10,315,965 இற்குரிய கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

**(இ) பதிவேடுகளை பராமரிக்காமை**

கீழே காட்டப்பட்டுள்ள ஏடுகள் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

(i) பொதுப் பேரேடு

(ii) கடன்கொடுத்தோர் பதிவேடு

(iii) கடன்பட்டோர் பதிவேடு

**1.3.7 இணக்கமின்மைகள்**

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பனவற்றிக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதிகள் | |
| (i) 214 ஆம் விதி மற்றும் நிதிப்பிரமாணம் 203 மற்றும் 756, | 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளிற்காக பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் 2011 ஆகஸ்ட் 04 ஆம் திகதி வரை இடம்பெற்றிருக்கவில்லை. |
| (ii) 168 ஆம் விதி | ஏதாவது ஒரு ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் அடுத்த ஆண்டின் மார்ச் 31 இற்கு முன்னர் கணக்காய்விற்கு சமரப்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2011 யூன் 04 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. |

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 356,480 ஆக இருந்ததுடன் அதற்கு நேர் ஒத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,419,931 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

**(அ) மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டும் முன்னைய ஆண்டின் பொருட்டும் மதிப்பிடக்கப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | | 2010 மதிப்பிடப் பட்ட | 2010 உள்ளவா றான | 2010 திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | 2009 மதிப்பி டப்பட்ட | 2009 உள்ள வாறான | 2009 திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | வீதவரியும் வரியும் | 220 | 499 | 220 | 18 | 205 | 103 |
| (ii) | வாடகை | 1,112 | 466 | 613 | 144 | 144 | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 348 | 1,822 | 118 | 688 | 152 | 536 |
| (iv) | பிடியாணைக் கட்டணமும் தண்டப்பணமும் | 243 | 182 | 604 | 2,154 | 2,857 | 578 |
| (v) | ஏனைய வருமானம் | 662 | 94 | 568 | - | - | - |

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம்

வெவ்வேறு கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதிவான் நீதிமன்றமொன்றினால் 2010 திசெம்பர் 31 வரை அறவிடப்பட்டு பிரதான செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ள ரூபா 1,190,214 தண்டப்பணத் தொகை சபைக்கு கிடைக்க வேண்டியுள்ளது.

### 2.2.3 முத்திரைக் கட்டணம்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 263,370 தொகை முத்திரைக் கட்டணங்களாக கிடைக்க வேண்டியுள்ளது.

### 2.2.4 வீதவரி மற்றும் ஏக்கர் வரி

வீதவரி அல்லது ஏக்கர் வரி ஆகியவற்றை செலுத்துவதை பகிஷ்கரிப்புச் செய்யும் போது 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158(1)(இ) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம், நடவடிக்கை மேற்கொண்டு அத்தகைய வீதவரி அறவிடப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாமையினால், 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 81,432 பெறுமதியான நிலுவை வரி காணப்பட்டது.

## 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் பாதீடு செய்யப்பட்டதும் உள்ளவாறான செலவினமும் உரிய முரண்களுடன் கீழே காட்டப்பட்டுள்ளது.

| செலவின விடயம் | 2010 பாதீடு செய்யப்பட்டது | 2010 உள்ளவாறானது | 2010 முரண் | 2009 பாதீடு செய்யப்பட்டது | 2009 உள்ளவாறானது | 2009 முரண் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| மீண்டுவரும் செலவினம் | | | | | | |
| ஆளணி வேதனம் | 8,811 | 7,841 | 970 | 8,323 | 6,521 | 1,802 |
| ஏனையவை | 2,731 | 2,706 | 25 | 1,442 | 3,184 | (1,742) |
| உப மொத்தம் | 10,542 | 10,547 | 995 | 9,765 | 9,705 | 60 |
| மூலதனச் செலவினம் | 5,425 | 23,273 | (17,848) | 3,333 | 17,178 | (13,845) |
| மொத்தம் | 16,967 | 33,820 | ( 16,853) | 13,098 | 26,883 | (13,785) |

## 2.4 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவி அணி

2010 திசெம்பர் 31 இல் சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணி மற்றும் உள்ளவாறான பதவி அணி தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| பதவியினர் தரங்கள் | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளவாறான |
|---|---|---|
| பதவி நிலையினர் | 01 | - |
| இடை நிலையினர் | 13 | 07 |
| ஆரம்ப மட்டத்தினர் | 15 | 14 |
| வேறு (அமைய /தற்காலிக) | - | 10 |

## 2.5 சொத்துக்களின் முகாமைத்துவம்

### 2.5.1 பயன்படுத்தப்படாத மற்றும் குறைப் பயன்பாட்டிற்குட்பட்ட பௌதீக வளங்கள்

(அ) சபையிடமுள்ள மின்பிறப்பாக்கியை திருத்தியமைப்பதற்காக 2009 மார்ச் 22 ஆம் திகதி ரூபா 41,695 செலவினை மேற்கொண்டிருந்த போதும் கணக்காய்வு தினமான 2011 ஆகஸ்ட் 03 ஆம் திகதி வரையில் அதனை எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்காமல் செயலற்ற நிலைமையில் காணப்பட்டது. அதன் பிரகாரம் அதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் பயனற்ற செலவினமாக இருந்தது.

(ஆ) சபையின் நிதியத்தைக் கொண்டு தாபிக்கப்பட்டிருந்த பிலொக் கற்கள் உற்பத்தி செயற்திட்டம், பரிசோதனை தினமான 2011 ஆகஸ்ட் 03 ஆம் திகதி வரையில் செயற்பாடற்று இருந்தமையால் எவ்வித வருமானமும் உழைக்கப்படாமல் இருந்தது.

### 2.5.2 அறவிடப்படவேண்டிய ஊழியர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,135,645 ஆக இருந்தது.

### 2.5.3 கணிப்பீடு செய்யப்படாத சொத்துக்கள்

கணிப்பீட்டு சபை அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்படாத 2010 திசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு புத்தகப் பெறுமதி அடிப்படையில் கணக்கிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 9,373,765 ஆக இருந்தது.

## 2.6 செயற்பாட்டு வினைத்திறனின்மை

(அ) வீதி விளக்குகளைப் பராமரித்தல்

மின்சார தொழிநுட்பவியலாரின் ஒத்துழைப்புடன் சபை மூலம் பிரதேசத்தின் வீதி விளக்குகள் பராமரிக்கப்பட்டு வருவதுடன், அதற்காக 2010 ஆம் ஆண்டில் ரூபா 53,929 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், இலங்கை மின்சார சபையுடன் உடன்படிக்கை மேற்கொள்ளாத காரணத்தால் அப்பணத்தை மீள் நிரப்ப முடியாதிருந்தது.

(ஆ) கரந்தகொல்ல நீர் விநியோகத்திட்டம்

கரந்தகொல்ல நீர் விநியோகத்திட்டம் ரூபா 1,200,000 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், 2011 ஆகஸ்ட் வரையில் மக்களுக்காக பிரதிபலன்கள் கையளிக்கப்படாதிருந்ததாக அவதானிக்கப்பட்டது.

(இ) உரித்தைப் பொறுப்பேற்றல்

2010 ஆம் ஆண்டின் போது சபையினால் 03 சனசமூக மண்டபங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதும் அக்கட்டிடங்களை நிர்மாணித்துள்ள காணிகளின் உரித்தினைப் நிர்ணயிக்கப்பட்ட பிரகாரம் சபைக்குப் பொறுப்பேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.7 ஒப்பந்த நிர்வாகம்

தேசிய சவிய கமநெகும – 2010 இன் கீழ் இலுக்கும்புர கிராம சமூர்த்தி சங்கத்தின் மூலம் இலுக்கும்புர கிராமத்தின் மத்திய வீதி நிர்மாணம் ரூபா 415,672 செலவில் திருத்தியமைக்கப்பட்டிருந்தது.

2011 ஆகஸ்ட் 04 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் கீழே காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் அவதானிக்கப்பட்டது.

(அ) ஓரக்காண் வெட்டுதல் இடம்பெற்றிருக்கவில்லை.

(ஆ) குருணிக் கற்கள் போடப்பட்டிருக்கவில்லை.

(இ) 1:2:4 கலவையின் பிரகாரம் கொங்கிரீட் குறைத்து இடப்பட்டிருந்தமை

போன்ற காரணங்களினால் நிறைவேற்றப்படாத வேலை விடயங்களுக்காக ரூபா 91,495 கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது.

## 2.8 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதியளவில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு

(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஈ) வருமான நிர்வாகம்

(உ) சொத்து முகாமத்துவம்

(ஊ) களஞ்சியக் கட்டுப்பாடு

(எ) வாகனக் கட்டுப்பாடு

(ஏ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு